# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**வரி செலுத்துநர்களுக்கான அறிவித்தல்**

## இணையவழி வரிக் கொடுப்பனவுக் களம் (OTPP)

வரிக் கொடுப்பனவுகளின் வழமையான முறைமைகளுக்கு மேலதிகமாக, கீழே குறிபிடப்பட்டுள்ள வங்கிகளின் ஒருங்கிணைப்புடன், வரி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான இணையவழி வரி கொடுப்பனவுத் தளம் செயற்பாட்டில் உள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றோம். ஊரடங்கு உத்தரவு அல்லது உள்நாட்டு அமைதியின்மை காரணமாக பணம்/காசோலை கொடுப்பனவுகளுக்கு உங்களால் வங்கிகளுக்கு செல்லமுடியாத நிலைமை காணப்படும் போது, இணையவழி வரி கொடுப்பனவு தள (OTPP) முறைமையின் ஊடாக கூட்டிணைந்த/தனிநபர் வங்கி வசதிகளை பயன்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ள கட்டாயபடுத்தப்படுகின்றீர்கள்.

இணையவழி வரி கொடுப்பனவு தள (OTPP) முறைமையை இயலச் செய்யும் வங்கிகள்

| | அங்கத்துவ வங்கி | நிலவரம் | செயல்படுத்தப்பட்ட முறை | |
|---|---|---|---|---|
| | | | இணைய வங்கி | நேரடியான கொடுப்பனவு |
| 1 | சம்பத் வங்கி த.வ.க. | நேரடி | ✓ | - |
| 2 | இலங்கை கொமஷல் வங்கி த.வ.க. | நேரடி | ✓ | - |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | நேரடி | ✓ | ✓ |
| 4 | நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி த.வ.க.* | நேரடி | - | ✓ |
| 5 | மக்கள் வங்கி | நேரடி | ✓ | ✓ |
| 6 | தேசிய அபிவிருத்தி வங்கி * | நேரடி | - | ✓ |
| 7 | ஹட்டன் நஷனல் வங்கி த.வ.க | நேரடி | ✓ | - |
| 8 | இலங்கை வங்கி | நேரடி | ✓ | ✓ |
| 9 | பான் ஏஷியா வங்கி கூட்டுத்தாபனம் த.வ.க. | நேரடி | ✓ | - |
| 10 | கொழும்பு யூனியன் வங்கி த.வ.க * | நேரடி | - | ✓ |
| 11 | எச்.எஸ்.பி.சி (HSBC) | நேரடி | ✓ | - |

**நீங்கள் ஏற்புடைய வங்கியின் கிளையை உங்கள் சார்பாக பண பரிவர்த்தனையை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளலாம். கொடுப்பனவை மேற்கொள்வதற்கு வங்கிகளின் ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவையாகும்.*

ஏற்புடைய வங்கிகளுடன் தொடர்புகொள்வதன் மூலம் வழமையான பண பரிவர்த்தனை எல்லையை அதிகரித்துக்கொள்ளலாம் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றோம். உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் ரூபா 10 பில்லியன் வரையிலான பரிவர்த்தனை எல்லைக்கு இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் இத் தகவல் வரி கொடுப்பனவுகளுக்கு வசதிகளை மேற்கொள்ளும் அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

நீங்கள் இணையவழி வரி கொடுப்பனவு தளத்தை (OTPP) முதன்முறையாக பிரயோகிப்பவராக இருந்தால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.

http://www.ird.gov.lk/en/eServices/Lists/PaymentRefund/Attachments/7/User_Guide_for_IRD_Online_Payment_E.pdf

மேலதிக விவரங்களுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் அழைப்பு நிலையத்தை தொடர்பு கொள்ளவும் - 1944

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

TAXES - FOR A BETTER FUTURE